2022 மார்ச் 24] [திரு. தங்கம் தென்னரசு]

தயாரிக்கக்கூடிய ஒரு hub மூலமாக அங்கே நிறைய தொழில் தொடங்க வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அங்கே தொழிற்பேட்டைகள் அல்லது தொழிற்பூங்காக்கள் அமைக்க வேண்டியது அரசினுடைய கடமையாகவும் அவசியமாகவும் இருக்கிறது. இந்தத் தொழிற்பூங்காக்களை அமைப்பதற்கு நிலங்களைக் கையகப்படுத்துகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "விவசாயிகளுக்கு விரோதமாக, வேளாண் பெருங்குடி மக்களுக்கு விரோதமாக அவர்களுடைய நிலங்களைக் கையகப்படுத்த வேண்டாம்; கூடுமானவரையில் அங்கே இருக்கக்கூடிய land aggregators யாராவது இருந்தால் அவர்களிடத்தில் பேசி வாங்கலாம் அல்லது கம்பெனிகள் மொத்தமாக நிலங்கள் வைத்திருந்தால் அவர்களிடத்திலிருந்து முதலிலே வாங்குங்கள்" என்று எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, எந்த விவசாயிகளிடமிருந்தும் வலிந்து, வன்மையாக அந்த நிலங்களைக் கைப்பற்றிக்கொள்வது இந்த அரசினுடைய நோக்கமல்ல; அதேசமயத்தில் தொழில் வளர்ச்சியையும் நாம் கவனிக்க வேண்டும். எனவே, விவசாயிகளிடத்திலே கூடுமானவரையிலே பேசி அவர்களை நாம் convince செய்து ஒரு நல்ல compensation package–வுடன் அவர்கள் கொடுப்பதற்கு முன்வந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது வேறு வகையில் இருந்தால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான சூழ்நிலையை அங்கே உருவாக்க நிச்சயமாக தொழில் துறை நடவடிக்கை எடுக்கும். அதுகுறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நாங்கள் பேசுவோம் என்பதை உங்கள் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் 23-3-2022 அன்று மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தேசியப் பேரிடர் நிவாரண நிதி குறித்து எழுப்பியது விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு தேசிய பேரிடர் நிவாரண நிதி*

கேட்டீர்கள், எவ்வளவு நிதி வந்திருக்கிறதென்று ஒரு கேள்வியை எழுப்பினார்கள். 2021–2022 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழைக்கு மொத்தம் நாங்கள் கேட்ட தொகை 6 ஆயிரத்து 230 கோடியே 45 இலட்சம் ரூபாய். ஆனால், வந்த தொகை 352 கோடியே 85 இலட்சம் ரூபாய்தான். இதிலே தற்காலிக நிவாரணத்திற்காக 1,510 கோடி ரூபாய் நாங்கள் கேட்டிருந்தோம். அந்தத் தொகைகூட கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுபடியும் அதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலச் சீரமைப்புக்கு என்று 4,219 கோடி ரூபாய் உள்ளிட்டு மொத்தம் ரூ.6,230 கோடியே 45 இலட்சம் கேட்புத் தொகை கேட்டிருக்கிறோம். வந்தது ரூ.352 கோடியே 85 இலட்சம்.

முற்பகல் 10–15

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) சோளிங்கர், பள்ளி மாணவியர் இருவருக்கு Covaxin தடுப்பூசியால் பாதிப்பு—நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் நகரத்திலுள்ள திருமதி எத்திராஜம்மாள் முதலியாண்டார் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வரும் யோகலட்சுமி என்பவருக்கு சிறார்கள் தடுப்பூசி திட்டத்தின்கீழ், 4–1–2022 அன்று பள்ளி வளாகத்தில் Covaxin தடுப்பூசி போடப்பட்டது. பிறகு நோய்வாய்ப்பட்டு தொடர் சிகிச்சை பெற்றும், பலனில்லாமல் இரண்டு கண் பார்வையும் இழந்துள்ளார். அதே பள்ளியில் 9 ஆம் வகுப்பு பயின்று வரும் பிரியதர்ஷினி என்பவருக்கு 2–2–2022 அன்று பள்ளி வளாகத்தில் போடப்பட்ட Covaxin தடுப்பூசியால் உடல்நிலை பாதிக்கப்பட்டு தொடர் சிசிக்சை மேற்கொண்டும் பலனில்லாமல் இரண்டு கைகளும், இரண்டு கால்களும் செயலிழந்துள்ளன. இது தடுப்பூசி போட்டதாலோ அல்லது வேறு காரணமாகவோ என்று தெரியவில்லை. அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கூட நேரில் சென்று அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து வந்திருக்கிறார். அந்த இரு குடும்பங்களைச் சார்ந்தவர்கள் மிக ஏழ்மையான கூலித் தொழிலாளிகள் ஆவார்கள்.